ஸ்ரீ திரிபுரஸுந்தரீஸமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவராயநம:

# ஆர்ய தர்மம்.

अज्ञानपङ्कपरिमग्नमपेतसारं दुःखालयं मरणजन्मजरावसक्तम् ।
संसारबन्धनमनित्यमवेक्ष्य धन्या ज्ञानासिना तदवशीर्य विनिश्चरन्ति ॥

அஜ்ஞாநபங்கபரிமக்நமபேதஸாரம் து:காலயம் மரண ஜந்மஜராவஸக்தம் । ஸம்ஸாரபந்தநமநித்யமவேக்ஷ்ய தந்யா ஜ்ஞாநாஸிநா ததவஶீர்ய விநிஶ்சரந்தி ॥

धन्याष्टकम् । தந்யாஷ்டகம் ।

சில புண்யசாலிகள் அக்ஞானமென்னும் சேற்றில் நன்கு புதைந்தும் அறிவாளிகளால் விசாரிக்கப்பட்டால் அற்பங்கூட ஸாரமற்றும் ஸகல துக்கங்களுக்கும் இருப்பிடமாயும் ஜந்மா, ஜரை, மரணம் என்கிற இம்மூன்றுகளால் ஸம்மந்திக்கப்பட்டதாயும் இருக்கிற ஸம்ஸாரமெனப் பெயர்பெற்ற பெந்தத்தை அநித்தியமாகக் கருதி ஞானமென்கிற சிறந்த கத்தியால் அந்த பந்தத்தை அறுத்துவிட்டு ஸ்வச்சந்தமாய் தங்களிஷ்டப்படி ஆனந்தத்துடன் ஸஞ்சரிக்கிறார்கள்.

ஜனங்கள் அக்ஞானத்தின் மேலீட்டால் ஸகல கஷ்டங்களுக்கும் இருப்பிடமாயும் ஸுகலேசமற்றதாயுமிருக்கும் இந்தஸம்ஸாரத்தில் விழுந்து அடிக்கடி ஏற்படும். பலவாறான கஷ்டங்களையும் அநுபவித்து வருங்காலத்திலும் அதில் வெறுப்புத் தோன்றி அதைவிட்டு விலகுவதற்கு வேண்டிய மார்க்கத்தில் செல்லுகிறார்களில்லை. இதில் அற்பங்கூட ஸுகமில்லை என்பதைத் தான்,

संसारे रे मनुष्या वदत यदि सुखं स्वल्पमप्यस्ति किञ्चित् ।

ஸம்ஸாரேரே மநுஷ்யா வதத யதி ஸுகம் ஸ்வல்பமப்யஸ்தி கிஞ்சித்

ஹே மூடாத்மாக்களான ஜனங்களே! ஸம்ஸாரத்தில், அற்பமாவது சுகமிருப்பின்சொல்லுங்கள். நான் அங்கீகரிப்பதில் ஆக்ஷேபமில்லை என்று ஒரு கவி கூறியுள்ளார். ஆகையால் இதைவிட்டு விலகியவர்கள்தான் துக்கமில்லாமல் நித்யாநந்தபரிதர்களாயிருப்பார்கள் என்று அறிவிக்கப்படுகின்றது.

சுபம்!

ஆர்ய உபபத்திராதிபர்.

296

# ஆர்ய தர்மம்.

பிரபவஹூ வைகாசி-மீ௴ சூ௨

## ஆத்மாநாத்ம விவேகம்.

(௨௪௬-வது பக்கத்தொடர்ச்சி)

சிஷ்—சிரத்தை என்றால் என்ன ?

குரு—ஆசார்யர்களுடைய உபதேசமொழிகளிலும் வேதாந்த சாஸ்திரங்களரல் கூறப்படும் அர்த்தங்களிலும் மிகவும் விச்வாசம் வைப்பதே சிரத்தையாகும். இதுவரை இங்கு நிருபிக்கப்பட்டவைகளே சமாதிஷட்கமாகும்.

சிஷ்—நான்காவது சாதனமாகக் கூறப்பட்ட முமுக்ஷுத்வம் என்பதற்கு யாது பொருள் ?

குரு—எவ்விதமாகிலும் மோக்ஷத்தை அவசியம் பெறவேண்டுமென்கிற தீவிரமான இச்சையுடன் கூடியிருக்கும் தன்மையாகும். இங்கு கூறப்பட்ட நான்கும்தான் ஸாதனசதுஷ்டய சம்பத்தி என்று சொல்லப்படுகிறது. இந்நான்கு ஸாதானங்களை உடையவனே ஸாதன சதுஷ்டய ஸம்பன்னனாகிறான். அவனுக்குத்தான் ஆத்மாநாத்ம விசாரத்தில் அதிகாரம் ஏற்படுகிறது. எங்ஙனம் பிரும்மசாரிகளுக்குச் செய்யத் தகுந்த வேறு வேலையானது இல்லையோ அவ்விதம் இவனுக்கும் ஆத்மானாத்ம விசாரத்தைத் தவிர வேறானசெய்யத் தகுந்த காரியம் ஒன்றுமில்லை.

சிஷ்—இங்கு கூறப்பட்ட ஸாதனசதுஷ்டய ஸம்பத்து இல்லாதவர்களுக்கு ஆத்மானாத்ம விசாரத்தில் அதிகாரமுண்டா இல்லையா ?

குரு—ஸாதன சதுஷ்டய சம்பத்து இல்லாதவர்களான கிருஹஸ்தர்களும் ஆத்ம விசாரத்தைச் செய்யலாம். அதினால்

அவர்களுக்கு யாதொரு தோஷமும் ஏற்படாமல் மிகவும் சிரேயஸ்ஸே உண்டாகும். இவ்விதமே

दिने दिने च वेदान्तविचाराद्भक्तिसंयुतात् ।
गुरुशुश्रूषया लब्धात् कृच्छ्राशीतिफलं भवेत् ॥

திநே திநே ச வேதாந்தவிசாராத்பக்திஸம்யுதாத் ।
குருசுச்ரூஷயா லப்தாத்க்ருச்ச்ராசீதிபலம் பவேத் ॥

ஒவ்வொரு தினமும் மிகவும் பக்தியுடன் ஸ்ரீ குருவிற்குப் பணிவிடை செய்து அவர்களின் அநுக்கிரஹத்தால் அடையப்பட்ட வேதாந்த விசாரத்தால் 80 கிருச்ர பலமுண்டாகும் என்று பெரியார்கூறியுள்ளார்.

சிஷ்—சிரேயஸ்ஸைப் பெறவேண்டுமென்கிற விருப்பமுள்ளவர்களுக்கு ஸாதன ஸம்பத்து இல்லாவிடினும் ஆத்மாநாத்ம விசாரம் செய்யவேண்டியது அவசியமென்று தங்களாலுபதேசிக்கப்பட்டதை சிரத்தையுடன் கிரஹித்துக்கொண்டேன். ஆத்மாவென்றால் எது ?

குரு—ஸ்தூல சூக்ஷ்மகாரணமென்கிற மூன்றுவித சரீரத்தைக் காட்டிலும் வேறாகவும் பஞ்சகோசத்தில் சம்பந்தப்படாததாயும் மூன்று அவஸ்தைகளுக்குச் சாக்ஷியாயும் சச்சிதாநந்த ஸ்வரூபமாயும் இருப்பது ஆத்மாவாகும்.

சிஷ்—அநாத்மாவென்றால் என்ன ?

குரு—அந்ருதஜட துக்காத்மகமாயும் ஸமஷ்டி வ்யஷ்டியாத்மக மூன்று சரீரங்களே அநாத்மாவாகும்.

சிஷ்—மூன்று சரீரங்கள் எவை ?

குரு—ஸ்தூல ஸூக்ஷ்ம காரணம் என்று பெயருள்ளவைகளே

சிஷ்—ஸ்தூல சரீரமென்றால் எது ?

குரு—பஞ்சீகரணம் செய்யப்பட்ட பூதங்களுடைய காரிய பூதமாயும் கர்மாக்களால் உண்டு பண்ணப் பட்டதாயும் ஜன்ம முதலான ஆறுபாவவிகாரங்களை உடையதாயுமிருப்பதுஸ்தூல சரீரமாகும். இந்த அபிப்பிராயத்தையே

पञ्चीकृतमहाभूतसम्भवं कर्म सञ्चितम ।
शरीरं सुखदुःखानां भोगायतनमुच्यते ॥

பஞ்சீக்ருதமஹாபூதஸம்பவம் கர்ம ஸஞ்சிதம் ।
ஶரீரம் ஸுகது:கானாம் போகாயதனமுச்யதே ॥

இதனால் ஒரு பண்டிதர் வெளியிட்டு இருக்கிறார்.

சிஷ்—பஞ்சீகாரணம் என்றால் என்ன ?

द्विधा विधाय चैकैकं चतुर्धा प्रथमं पुनः ।
स्वस्वेतरद्वितीयांशैर्योजनात् पञ्च पञ्च ते ॥

த்விதா விதாய சைகைகம் சதுர்தா ப்ரதமம் புன: ।
ஸ்வஸ்வேதரத்விதீயாம்ஶைர்யோஜனாத் பஞ்ச பஞ்ச தே ॥

பிருதிவி, அப்பு, தேயுள், வாயு, ஆகாயம் இவ்வைந்துகளையும் ஒவ்வொன்றையும் இரண்டாகப் பிரித்து ஒரு பாகத்தைத் தனியாக வைத்து விட்டு மற்றொரு பாகியை நாலாகப் பிரித்து ஒவ்வொரு பாகத்தையும் முன் வைத்திருக்கும் பாகத்துடன் சேர்ப்பது பஞ்சிகரணமாகும். பால்யம், கௌமாரம், யௌவனம், முதலான அவஸ்தைகளில் முறையே குறைவடைவதால் சரீரமென்று பெயர் ஏற்பட்டிருக்கிறது. இதற்கே தேகமென்றும் ஒரு பெயர் உண்டு. தகபஸ்மீகரணே என்ற வித்பத்தியால் முடிவில் பஸ்மஸ்வரூபமாகிறது என்று அதன் கருத்து.

சிஷ்—சில தேகங்கள் அக்னி சம்பந்தத்தால் பஸ்மமாகாமல் பூமியில் புதைக்கப்படுகின்றன அவ்விதமிருக்க ஸ்தூல தேகம் பூராவும் பஸ்மீபாவத்தை யடைகிறதென்று தாங்கள் கூறியது பொருந்தவில்லையே.

குரு—உன் அபிப்பிராயப்படி நீ வினவுவதுசரியே ஆனாலும்சகலமான ஸ்தூல சரீரத்திற்கும் ஆத்யாத்மிகம் ஆதிபௌதிகம் முதலான தாபத்திரயாக்னியால்தாகம் சம்பவிக்கிறதுஎன்று நான் கூறியதின் கருத்து.

ஆர்யதர்மம் உபபத்திராதிபர்.

(இன்னும் வரும்)

# கோயம்புத்தூரில் ஆசார்ய விஜயமும் உபன்யாசமும்.

(உரு௯ஙு-வது பக்கத்தொடர்ச்சி.)

பிர்மனது பத்னியை வாக்குக்கு அதிபதி என்றும் அரியின்பத்னியை பத்மா என்றும் அரனின் மனைவியை பர்வதராஜனின் மகளென்றும் ஆகமமறிந்தோர் கூறுகின்றனர். நீயோ நான்காவது. உன்னை இன்னென்று சொல்ல இயலாது. அளவில்லா மஹிமை பெற்றவள். மகாமாயை உலகத்தையெல்லாம் சுழற்றுகிறாய். நீ பரப்ரம்மத்தின் பத்னி என்று பகவத்பாதர் கூறும்வண்ணம் பரம சிவனே துரீயமூர்த்தி என்றாயிற்று. இவ்வளவால் சிவனைத்தான் உயர்த்திவிட்டேனென்று எண்ணக்கூடாது. மிகத்தாழ்மையாய் நினைப்பவர்களுக்கு மிகமேன்மை பொருந்தியவர் என்று தெரியும் பொருட்டுச் சொன்னேனுதல் பற்றி ஹரி ஹரபேதமின்றியே தேவனை ஆராதிக்க வேண்டும். ஏற்றத் தாழ்ச்சியை மனதில் எண்ணுபவன் நாம பஜனம் செய்யக் கூட அர்கனல்லவென்று போதேந்திர ஸ்வாமிகள் நாமாபராதம் 10 என்று சொல்லுமிடத்தில் ஸ்பஷ்டமாய்க் கூறியுள்ளார். ஆகவே இவ்விதம் நீங்கள் பஜனை செய்து சித்தி பெறுவீர்களாக என்று ஆசீர்வதித்தனர்.

ஆரியர்களே! இன்னும் எதைத்தான் வளர்த்துக் கூறுகிறது. மனதில் ஒன்றும் உருப்படியாய் இல்லை. எழுத இறகேந்தினால் முடிவடைவதுமில்லை. ஸ்ரீமஹாசார்யாள் இவ்வூருக்கு விஜயம் செய்த தினம் முழுவதும் கடோரமாய்த் தன் கிரணங்களை வீசி எறித்துக்கொண்டிருந்த கதிரவன் குளிர் கிரணமுள்ளவனுனன். மழையும் திவ்யமாய்ப் பொழிந்தது. ஜனங்களின் பக்தி ஆனந்தத்திற்களவில்லை. இன்னும் இரண்டு தினம் இங்கு தாமதித்துப் பிறகு பாலக்காட்டிற்கு விஜயமாவார்கள். ஆங்காங்கேற்படும் அளவிலாவானந்தத்தை என் நேயர்களுக்கு இதன் மூலமே வெளியிடுகின்றேன்.

சுபம்.

M. N. சுப்பிரமண்ய சாஸ்திரி.

300

# ஆன்ஹிகக்கிரமம்.

(உசo-வது பக்கத்தொடர்ச்சி)

சூத்ரன் கொண்டு வந்ததும், துணியில் கையில் கொண்டு வந்ததும் விலை கொடுத்து வாங்கியதும் அர்ச்சனைக்கு ஏற்றதல்ல. தானே கீழ் விழுந்தவை. (பவழமல்லி தவிர) நேற்று எடுத்தது எருக்க இலையில் பட்டவை வாஸனையற்றவை. இவைகளும் பூஜார்ஹமல்ல. துளசியை வெள்ளி செவ்வாய்க் கிழமைகளிலும் ஏகாதசித்வாதசிகளிலும் பகலிலும் பர்வாக்களிலும் எடுக்கக் கூடாது. துளஸி மஹாவிஷ்ணுவுக்குப் பிரியையான பிருந்தையாதலால் அதை அவர் பூஜைக்காக எடுக்கும்போது அந்த ஹிம்ஸையைப் பொறுக்கும்படி சிலசுலோகங்களைக் கூறவேண்டும். இதே போல் ஈசனுக்குப் ப்ரியமான பில்வத்திற்கும் சில நியமங்களுண்டு.

மூன்றும் பாகத்தில், தனது தாய் தந்தைகளையும் பந்துக்களையும் குழந்தைகளையும் ரக்ஷிப்பதற்கும் அக்னிஹோத்ரம் அதிதி பூஜை முதலியவைகளுக்கும் தனம் வேண்டியிருப்பதால் அதை ஸம்பாதிக்க வழி தேட வேண்டும். யாகம் செய்து வைத்தல் தானம் வாங்கல், வேதமோதி வைத்தல், இம்மூன்றும் பிராமணர்களுக்கு விருத்திக்காக ஏற்பட்ட மார்க்கங்களாகும். இவ்வுத்தம விருத்தியைச் செய்ய அல்லது ஆபத் விருத்தியான க்ஷத்ரிய வைச்ய விருத்திகளையும் செய்ய இம்மூன்றும் முகூர்த்தமே தக்க காலம். அல்லது தனது நிலம் முதலியவைகளைக் கவனிக்கவும் இச்சமயமே ஏற்றதாகும். நாலாம் முகூர்த்தத்தில் மாத்யான்ஹிக ஸ்நாநத்திற்காக சுத்தமிருத்திகையை எடுத்துக் கொண்டு நதீ தடாகாதிகளுக்குச் செல்ல வேண்டும். மாத்யான்ஹிக ஸ்நாநம் ஸாவகாசமாகச் செய்ய வேண்டும். சரீரமலங்களை நீக்க மிருத்திகை நெல்லிக்காய் புங்கங்கொட்டை முதலியவைகளை உபயோகித்து எவ்வளவு நிதானமாகச் செய்யமுடியுமோ அவ்வளவும் செய்து மாத்யான்ஹிகம் செய்து முடிக்கவேண்டும். பிரும்மயக்ஞம் காலையில் செய்யாமலிருந்தால் இச்சமயம் செய்து விதிப்படி தர்ப்பணம் செய்யவேண்டும்.

அதன் பின் வீட்டிற்கு வந்து பஞ்சாயதந பூஜை செய்ய வேண்டும். இது ஐந்தாம முஹூர்த்ததின் ஆரம்பமாகும். ஆதித்யன் அம்பிகை விஷ்ணு கணநாதன் மஹேச்வரன் இவர்களே பஞ்சாயதனங்களாகும்.

## பூஜாவிதி.

ஸர்வ சாஸ்திரங்களிலும் கூறப்பட்டது இப் பஞ்சாயதந பூஜை. கிருஹஸ்தன் மததவேஷமில்லாமல் சிஷ்ட ஸம்ப்ரதாயத்தையும் ஒட்டி இதைச் செய்யவேண்டும். இதில் ஏதாவதோர் மூர்த்தியை அல்லது ராமகிருஷ்ணாதிகளை ப்ரதாநமாக வைத்து மற்றவைகளை அதற்கு அங்கமாக வைத்துப் பூஜிக்கவேண்டும். கொஞ்சம் நீளமாக உள்ளது பாணமெனப்படும். அதே பரமேச்வரஸ்தானமாகும். சிலவை ஒரு பக்கம் பசுமையாகவும் மற்றோர் பக்கம் கருப்பாகவும் காணப்படும். அது ஹரிஹரன் அல்லது அர்த்தநாரீச்வரர் எனப்படும். அதைப் படுக்கவைககலாகாது. வெள்ளியினுலோ வேறெந்த லோஹத்தாலோ ஓர் பீடம் செய்து ஊர்த்வ முகமாக அதை நிறுத்திப் பூஜிக்கவேண்டும். யந்திரங்களால் செய்யப்படாமல் இயற்கையாக லக்ஷணம் அமைந்தது சிலாக்கியமாம். அது கிடைக்காவிடின் லிங்காகாரமாகச்சிலையிலோ ஸ்படிகத்திலோ செய்யப்பட்டதை மத்யமமாக ஏற்கலாம். கண்டகீ நதியில் எடுக்கப்பட்டவர்த்துளமாய் இடையில் த்வாரமும் அதனுள் சக்ரமும் அமைந்தது ஸாளகராம மெனப்படும். அது மஹாவிஷ்ணுஸ்தானமாகும். சோணபத்ரையில் எடுக்கப்பட்டு சிவப்பாய் உள்ளது கணபதி ஸ்தானமாகும். அதுவும் அதே சிலையில் ரூபத்துடனும் செய்ததும் தக்கதே. ஸ்படிகத்தில அடி பெருத்து நுனி சிறுத்து வர்த்துளமாயமைந்தது ஆதித்ய ஸ்தாநமாம். பஞ்சலோஹம் கலந்தது போல் ஸ்வர்ணரேகை அதிகம் ஓடுவது சிறிய வர்த்துளமானது அம்பிகாஸ்தானமாம். அது கிடைக்காவிடில் ஸ்வர்ணரஜத தாம்ராதிகளால் ஓரங்குலம் முதல் நாலங்குல உயரத்திற்கு மேல் போகாமல் அம்பிகை அமைப்பதுண்டு. இதே போல் அவரவர் அபிமதமான மூர்த்தியை அமைத்து எது உபாஸனமூர்த்தியோ அதை நடுவில் வைத்து ஈசாநாதிக்ரமமாக மற்ற நான்கு தேவர்களையும் வைத்து ஆராதிக்க வேண்டும்,

ஸ்ரீவத்ஸ வே. ஸோமதேவசர்மா,

# அகில பாரதவர்ஷீய ப்ராம்மண மஹா ஸம்மேளனம்.

பிரபவ-ஹு வைகாசி-மீ 13, 14, 15, (மே-மீ 26, 27, 28)

தேதிகளில்

## துவாரில் கூடும்.

இம்மஹாநாட்டின் அவசியத்தைப்பற்றியும், நோக்கத்தைப் பற்றியும், இதில் வாதிக்கப்பட்டு தீர்மானிக்கப்படவேண்டிய விஷயங்களைப்பற்றியும் நம் பத்திரிகையில் முன்னமேயே பல தடவைகளில் விவரித்திருக்கிறபடியால் மறுமுறை அவைகளை இங்கு குறிப்பிடுவது அனுவசியம். சிறிய ஜனத்தொகையினரான ப்ராம்மணர்கள் பெரியபூகண்டத்திற்குழைப்பாய் வெகுவிசாலமான இப்பாரத பூமியில் பற்பல இடங்களில் வெவ்வேறு பாஷைகளுடனும், பழக்க வழக்கங்களுடனும், நடையுடை பாவனைகளுடனும் பரஸ்பரம் கலந்துகொள்ள முடியாமல், தாங்கள் எல்லோரும் ஒரே வர்ணத்தைச் சேர்ந்தவர்கள் என்றஉணர்ச்சியும்' அதனால் ஏற்படக்கூடிய ஒற்றுமையும், அவ்வொற்றுமையை வளர்க்கக்கூடிய ஒரு பொதுஸபை, பொதுபாஷை முதலியவைகளுமின்றி இங்குமங்கும் சிதறிக்கிடக்கிறவர்களை ஒன்றுசேர்க்கவும், ஒற்றுமையையும், பொருப்புள்ள உண்மையான பொது உணர்ச்சியையும் பெருக்கி அவர்கள் ஸமூகத்திற்கு ஸம்பவித்து விருத்தியடைந்துவரும் துர்த்தசையை அகற்றும் விஷயத்தில் பரஸ்பரம் கலந்துகொண்டு தங்கள் ஸமூஹம் ஸம்பந்தப்பட்ட விஷயம் ஒவ்வொன்றிலும் முடிவான ஒரு ஸரியான அபிப்ராயத்தைத் தீர்மானம் செய்துகொண்டு அவ்வண்ணமே சுறுசுறுப்புடனும் உத்ஸாஹத்துடனும் உழைக்குமாறு தூண்டவும் பாரத பூமிமுழுவதும் உள்ள ப்ராம்மண ஸமூஹத்தினரனைவருக்கும் ஒரு ஸந்தர்ப்பத்தைக் கொடுக்கவே இம்மஹாநாடு கூட்டப்படுகிறது என்று சுருக்கமாய்ச் சொல்லுவது போதும். பற்பல மாகாணங்களில் ஜில்லாக்களிலோ, மற்ற சிறிய நகரங்களிலோ தனித்தனி ப்ராம்மண சபைகளிருக்கலாம். ஆனால், இந்நாடு முழுவதிலுமுள்ள எல்லோரையும் ஒரே கட்டிற்குள் வைக்கும்படியான ஒருஸபை இதுவரையில் ஏற்படவில்லையாதலால் நாம் கூட்ட முயற்சித்திருக்கும் இம்முதல் மஹா

நாட்டை ஒவ்வொரு உண்மைப் பிராம்மணரும அன்புடன் வரவேற்று இது ஸரிவர வெற்றிபெறத்தகுந்த உதவிகளையும் தங்களாலியன்றவரை திரவ்ய மூலமாகவும் சரீர ஸேவையாலும் செய்யவும் உத்ஸாகத்துடனிருப்பார்கள் என்று பூர்ணமாய் நம்புகிறோம்.

இது துவாரிலேயே வரும் பிரபவ-ஸு வைகாசி-மீ 13, 14, 15, (மே-மீ 26, 27, 28, ) தேதிகளில் நடைபெறும். இம் மஹாநாடு நடைபெறும் இடத்தைப்பற்றி எல்லோருக்கும் தெரியுமாறு கொஞ்சம் விவரித்துரைக்க வேண்டியது அவசியம். துவார்என்பது தஞ்சாவூர்ஜில்லாவில் உள்ளஓர்சிறியகிராமந்தான். இப்படிப்பட்ட சிறியகிராமத்தில் கூட்டும்விஷயத்தில் அபிப்பிராய பேதமிருக்கலாம். அதைநாம் இவ்விடத்தில் வாதிக்கத் தயாராக வில்லை. இதற்கு மகாநாட்டிலேயே தான் நம்ஸமா தானத்தைச் சொல்ல வேண்டுமென்பது நமது முடிவான கொள்கை. ஆனால் நாம் இங்கு கூட்ட நினைத்திருப்பது காரணமன்றியில் இல்லை என்பதை மட்டும் பொதுவாய் எல்லோருக்கும் தெரிவித்துக் கொள்ளுகிறோம். இவ்வூருக்கு தஞ்சாவூர், திருச்சி முதலிய இரு ரெயில்வே ஜெங்ஷன்களிலிருந்தும் புதுக்கோட்டை மார்க்கமாக மோட்டார் பஸ்களின் மூலமாய் வந்து சேரவேண்டும். மஹா நாட்டிற்கு வருபவர்களின் சௌகரியத்தைக் கருதியே மோட்டார்பஸ்கள் தஞ்சாவூர், திருச்சி முதலிய இரண்டு இடங் களிலிருந்தும் நேராக மகாநாடு நடக்கும் ஸ்தலம்வரை வருமாறு ஏற்பாடு செய்யப்படும் இம்மஹா நாட்டிற்கு ப்ராம்மணர்களே பிரதிநிதிகளாக அங்கீகரிக்கப்படுவார்கள். பிரதிநிதிகள் தனிப் பட்ட ஹோதாவிலும், ஸ்திரமாயோ அல்லது தாத்காலிகமாகக் கூட்டப்பட்டோ நடக்கும்சபைகளின் சார்பாகவும்அங்கீகரிக்கப் பட்டு வரவேற்கப்படுவார்கள். விஸிட்டர்கள் என்ற ஹோதாவில் ப்ராம்மணரல்லாதாரும்வரவேர்க்கப்படுவார்கள், ஆனால், அவர்கள் பிரதிநிதிகளாக அங்கீகரிக்கப்பட்ட ப்ராம்மணர்களின் பொறுப் பின்பேரில் அவர்களுடைய வேண்டுகோளின் பேரிலே தான் அநுமதிக்கப்படுவார்கள், பிரதிநிதிகளும், விஸிட்டர்களும் அநுமதிச்சீட்டுப்பெற அவர்களுக்கு முறையே ஏற்படுத்தப் ப்ட்டிருக்கும் ரூ. 3, 2 (பிரதிநிதிக்கட்டணம் ரூபா 3, விஸிட் டருக்கு ரூபா 2) ஐ; நமது ஸம்மேளனம் காரியாலயத்திற்கு

இப்பொழுதே சீக்கிரம் அனுப்பிவிடவேண்டும். அனுப்பப்பட்ட பணம் எக்காரணத்தை முன்னிட்டும் வாபீஸ்செய்யப்பட மாட்டாது. எல்லோருக்கும் தங்க இடமும் போஜனமும் இனமாகவே எவ்விதக் கட்டணமும் அன்னியில் அளிக்கப்படும்.

சபைகளின் சார்பாகப் பிரதிநிதிகளாகவோ, அல்லது தனி ப்ரதிநிதியாகத் தானாகவோ அழைக்கப்பட்டோ இம்மஹா நாட்டிற்கு வரும் பிரசித்த பண்டிதர்கள் எவ்விதக் கட்டணமுமன்னியில் வரவேற்கப்படுவார்கள். ஆனால், முன்னமேயே நமக்கு அறிவித்துத் தகுந்த ஏற்பாடுகள் செய்யப்படவேண்டும். எக்காரணத்தை முன்னிட்டும் இப்பண்டிதர்கள் விஷயத்திலும் ஸரி மற்ற எந்தப் பிரதிநிதிகள் விஸிட்டர்கள் விஷயத்திலும் ஸரி போக்குவரத்துச் செலவாகட்டும், மற்ற எந்தச் செலவாகட்டும், இம்மஹாநாடு ஏற்றுக்கொள்ள முடியாதநிலைமையில் இருப்பதை மிக்க மனவருத்தத்துடன் தெரிவிக்கவேண்டியிருக்கிறது, இம் மஹாதாட்டில்பிரேரேபணை செய்யஉத்தேசித்திருக்கும் தீர்மானங்களும் மே-மீ 1-௨ க்கு மேற்போகாமல் நம்காரியாலயத்திற்கு அனுப்பப்படவேண்டும்.

இம்மஹாநாடு ஸம்பந்தமான ஸமாசாரங்களை முடிந்தமட்டில் அதிதீவ்ரமாகப் பரவச்செய்து ஏராளமான பிரதிநிதிகளும், விஸிட்டர்களும் இம்மஹாநாட்டிற்கு விஜயம்செய்யும்படிசெய்து, முதல் முதலாக ஆரம்பிக்கப்படும் இம்மஹாநாடு நன்கு வெற்றி பெறுமாறு எல்லோரும் நம்முடன் ஒற்றுமைக்க வேண்டுமென ப்ராம்மண ஸமூஹத்தினர்களனைவரையும் வேண்டிக்கொள்கிறோம். மற்றும் ஓர் விக்ஞாபனம், இம்மஹாநாடு ஸம்பந்தமாக நாம் முக்கியமான பற்பல இடங்களுக்குச்சென்று பிரசாரம்செய்ய வேண்டியதும் மற்ற மகாநாட்டுக்காகப் பந்தல்கள் போடவும் இனமன்னம் அளிக்கவும், இன்னும் பல கணக்கற்ற அவசியமான செலவுகளைச் செய்வதும் அத்யாவசியமாக இருப்பதாலும், அவைகளை ஸரிவரநடத்த அதிகமானபணம் தேவையாகையாலும் ப்ராம்மண ஸமூஹத்தினர்களும் அவர்களுடைய விஷயத்தில் அனுதாபம்காட்டி ஆதரவு செய்துவரும் மற்றவர்களும் இம்மஹாநாட்டின்காரியம் சிரமமன்னியிலும், சிறிதும் கவலையின்றியும் நடைபெறுமாறு திரவ்யமூலமாகவும், இன்னும் பற்பலவிதமாகவும்

உதவிபுரியும்படி வேண்டுகிறோம். மஹாநாடு கூடும் காலம் இன்னும் சற்றேறக்குறைய ஓரே வாரம் தான் இருப்பதாலும், அதற்குள் நாம் பூர்வாங்கமாகச் செய்யவேண்டிய காரியங்கள் கணக்கற்றவைகளாக யிருப்பதாலும், 'மகாநாடு 'ஸம்பந்தமான பண உதவி' என்று குறிப்பிட்டு அவர்கள் செய்யவெண்ணியிருக்கும் பண உதவியை, இனியும் சிறிது கூடத்தாமதிக்காமல் இன்றைக்கே நமது கார்யாலயத்திற்கு அனுப்பிவிடுமாறு மிகவும் மன்றாடிப் பன்முறை பலவாறு வேண்டிக்கொள்கிறோம்.

ஸரிவர இம்மஹாநாடு நடைபெறுவதிலேயே நமது ஸமூஹத்தின்உயிரும், மதிப்பும், செல்வாக்கும், பலமும், ஆழ்ந்து கிடக்கிறபடியால், பொதுவாகஉலகத்தினுடையவும்விசேஷித்துத் தங்களுடையதுமான அபிவிருத்தியையும் க்ஷேமத்தையும் குறித்து முதல் முதலாக ஆரம்பிக்கப்பட்டிருக்கும் இப்பெரிய காரியம்நிர்விசாரமாயும்சிறப்புடனும் நடைபெறவேண்டியதற்குத் தகுந்த திரவ்ய ஸஹாயத்தைத் தாமதிக்காமலும் தாராளமாகவும் மிகவும் சந்தோஷத்துடன் உடனே செய்தும், பிறகு, மஹாநாட்டிற்கு விஜயம்செய்து அதன்நடவடிக்கைகளில் கலந்துகொண்டும், மற்றும் பற்பல விதமாகவும் நம்முடன் ஒத்துழைத்து நமது நோக்கம் நன்கு ஸபலமாகுமாறு செய்யவேண்டு மென்று ப்ராம்மண ஸமூகத்தின்ர்களனைவரையும் மறுமுறை பலவாறு பிரார்த்திக்கிறோம்.

மஹாநாடு ஸம்பந்தமான நடவடிக்கைகளைப் பற்றிய பூராவிவாங்கள் நமது பத்திரிகையின் விசேஷ அனுபந்த மூலமாகவும், மற்றப்பத்திரிகைகள மூலமாகவும் முன்னதாகவே கூடிய சீக்கிரத்தில் அறிவிக்கப்படும். அக்ராஸனாதிபதி ஸ்ரீமான் M.K. ஆசார்யர் அவர்கள் டில்லி இந்தியா சட்டசபை மெம்பர் உபசாரணைக் கமிட்டித்தலைவர் ஸ்ரீமான் K. S. ராமஸ்வாமி சாஸ்திரிகள் அவாகள் B. A. B. L. ஸப்ஜட்ஜ் தஞ்சாவூர்

து. க. ஜகன்னாதாசார்யர்,
மஹாநாடு கூட்டுபவர்
துவார் போஸ்டு,
(காம்பக்குடி வழி) தஞ்சை ஜில்லா.

## ஐய்யவிஞுவிற்களித்த நெறி முறையின் விடை.

ப்ரபவ ஸூ சித்திரை மீ 9உ வெளிவந்த ஆர்யதர்மத்தில் நமது பண்டிதமணி கொத்தமங்கலம் K. S. சுந்தர ஜோதிஷர் அவர்களால் ஐய்யவிஞுவென்ற தலையங்கப்பெயருடன் வரையப் பட்டிருந்த வியாஸத்தைக் கண்ணுற்றேன்.

நமது மித்ரமணி K. S. சுந்தரஜோதிஷர் அவர்களால் வரையப்பட்டதாகிய விஷயம் கும்பாபிஷேக முகூர்த்த விஷயத்தில் 1 லக்கினசுத்தம், 2 பஞ்சகம், 3 நக்ஷத்திரகண்டாந்தம். இவைகள் பார்க்க வேண்டியது அவசியமா அன்று யென்று வரையப் பட்டிருக்கிறது.

(1) உலகத்திலுள்ள ஸர்வ ஜீவராசிகளுக்கும் ஏற்படக் கூடியதான நன்மை தின்மைகளைக் கண்ணாடியைப் போல் காண்பிக்கக் கூடியது ஜோதிஷசாஸ்திரமே. அப்படிப்பட்ட ஜோதிஷ சாஸ்திரமானது மூன்று ஸ்கந்தத்தோடு கூடியது. 1 ஹோரா ஸ்கந்தம், 2 கணனஸ்கந்தம், 3 ஸம்ஹிதாஸ்கந்தம் என மூன்று வகைப்படும். ஹோராஸ்கந்தமானது ஜாதகப்ரகாணம், ப்ரச்னப்ரகரணம், முகூர்த்தப்ரகரணம், கர்மகாண்டப்ரகரணம, என நான்கு வகைப்படும்.

(2) முகூர்த்தப்ரகரணமானது கர்ப்பாதானம் முதல் நாற்பத்தெட்டு ஸம்ஸ்காரங்களுக்கும், யாத்திரை, தடாகப்ரதிஷ்டை, ஆலயப்ரதிஷ்டை, கும்பாபிஷேகம்; முதலான அநேக சுபவிஷயங்களுக்கும் அந்தந்தக்காலங்களில் அந்தந்தக் கர்மாக்கள்ஸபலமாக முடியவேண்டியதை முன்னிட்டும் ஜெனங்கள் க்ஷேமத்தையடையவேண்டியதை முன்னிட்டும் கெடுதலான கர்மாக்கள் தங்களைச் சாராமலிருக்கவேண்டியதை முன்னிட்டும் முகூர்த்த சாஸ்திரம் ஏற்பட்டிருக்கிறது.

(3) அந்த முகூர்த்த பாவமானது ஸாமான்யம், விசேஷம் என இருவகைப்படும். அவைகளில் ஆலயப்ரதிஷ்டை, கும்பாபிஷேகம் முதலானவைகள் விசேஷமானது. எந்த சுபகாரியஉபக்கிரமங்களுக்கும் திருகாலஞானிகளாகிய மஹரிஷிகளால் வரையற வகுக்கப்பட்டதான ஏகவிம்சதி (21) மஹாதோஷங்கள் ஸம்பந்தப்படாததாயும்,ஸாமான்ய தோஷங்கள்சில விருப்பினும்எதில் குணங்கள் அதிகமாயிருக்குமோ அப்படிப்பட்ட முகூர்த்தத்தை சுபகாரியங்கள் விஷயமாய் கிரஹிக்க வேண்டியதென்றும் சாஸ்திரங்கள் முறையிடுகின்றன.

(4) விசேஷ விதியுள்ள தடாகப்ரதிஷ்டை, ஆலயப்ரதிஷ்டை, கும்பாபிஷேகம் முதலியவைகளுக்கோயென்றால்மேல்சொல்லப்பட்டதான ஏகவிம்சதி மஹாதோஷங்களில் ஒருதோஷங்களும் ஸம்பந்தப்படாததாயும், சாமான்ய தோஷங்களிலும் கிஞ்சித்துங் கூட ஸம்பந்தப்படாததாயும் அதிகமான ஸுகுணமுள்ளதாக விருக்கக்கூடிய நன் முகூர்த்தங்களைப் பார்க்க வேண்டியது தான்முற்றிலும்நியாயமாகவும்சாஸ்திரசம்மதமாகவுமிருக்கின்றது

(5) லக்கினங்கள் ஸ்வகீய உச்சஸ்தான ஸ்வக்ஷேத்திரஸ்வாம்சமித்திரநவாம்சங்களிலுள்ள மூன்று சுபக்கிரஹங்களோடு கூடி பஞ்சேஷ்டிக பலயுக்தமாய் 3, 6, 11 இந்த ஸ்தானங்களில் பாபக்கிரஹங்களையுடைத்தாய் வர்க்கோத்தமாம்ச ஸகிதமாய் அத்தியர்தாதிகமாய் பலமுடைத்தாயிருந்தாலும் பூர்வம் சொல்லப்பட்ட ஏகவிம்சதி மஹாதோஷங்களில் ஏதாவதொன்று மேலே சொல்லப்பட்ட சுபமுகூர்த்தங்களில் ஸம்மந்தமிருக்குமானால் அப்படிப்பட்ட முகூர்த்தங்களை விலக்கவேண்டியது அவசியமானதால் மேலே கேழ்க்கப்பட்டதான நக்ஷத்திரகண்டாந்த தோஷமானது ஏகவிம்சதி மஹாதோஷங்களிலொன்றானதால் இந்த நக்ஷத்திர கண்டாந்த தோஷமுடைய முகூர்த்தத்தை அவசியம் விலக்க வேண்டியது.

(6) சுபக்கிரஹங்களான வியாழன், சுக்கிரன், புதன், இவர்களின் ஸம்மந்தமான வீக்ஷண்யமும் சேர்க்கையுமிருப்பினும் மேலும் மூலத்திரிகோண மித்திர க்ஷேத்திர ஸ்வக்ஷேத்திரங்களினாலும் 4, 5, 9, 10 இந்த ஸ்தானங்களிலானாலும் ஷடி புத, குரு, சுக்கிரர்களிருப்பினும் லக்கினத்தின் 11ஆம் ஸ்தானமாகிய லாப ஸ்தானத்தில் சூரியனிருப்பினும், பகல் இரவு கால லக்னத்தைச் சேர்ந்த சகல தோஷங்களையும் ஹதமாக செய்வாரென்றுயிருந்தாலும், அப்படிப்பட்ட முகூர்த்தங்களில் மேலே சொல்லப்பட்ட மஹாதோஷங்களில் ஒன்றிருப்பினும் இந்த மஹாதோஷங்களை நிவர்த்திக்க ஷடிபுத, குரு, சுக்கிரர், ரவி இக்கிரஹங்கள் சக்தியற்றவர்களாயிருப்பதால் அம்முகூர்த்தங்களை (ஏகவிம்சதி மஹாதோஷமுள்ள முகூர்த்தங்களை) அவசியம விலக்கவேண்டியதென்று கிரந்தாந்திரங்கள் முறையிடுகின்றன.

(7) முகூர்த்த விஷயத்தில் முக்கியம் பார்க்கக்கூடியதான லக்கின சுத்தம், பஞ்சக சுத்தம் இவைகள் சுத்தமில்லாமல்

தோஷமிருப்பினும் அது ஏகவிம்சதி மஹாதோஷங்களில் சேராத ஸாமான்ய தோஷத்தில் சேர்ந்ததால் ஷடி சுப முகூர்த்த விஷயத்தில் முற்றிலும் விலக்க வேண்டியது. ஷடி லக்கினதோஷம் பஞ்சகதோஷங்களுக்கு 6வது பாராவில் சொல்லப்பட்ட சுபத்துவமிருக்கும்பக்ஷத்தில் மேல்கண்ட லக்கினதோஷம் பஞ்சக தோஷம் நிவர்த்தியாகுமென்று கிரந்தங்கள் முறையிடுகின்றன.

(8) மேலே சொல்லப்பட்ட நக்ஷத்திர கண்டாந்தம், லக்கினசுத்தம், பஞ்சகம், இந்த மூன்றுவிதமான விஷயங்கள் விசேஷ விதியுள்ள தடாகப்ரதிஷ்டை, ஆலயப்ரதிஷ்டை, கும்பாபிஷேகம்முதலானசுபமுகூர்த்தங்களுக்கு அவசியம்பார்க்கவேண்டியது.

(9) முகூர்த்தங்களில் விசேஷமான தடாகப்ரதிஷ்டை, தேவதாப்ரதிஷ்டை, கும்பாபிஷேகம் முதலிய சுபகாரியங்களுக்கு சர்வ சாமான்யதோஷங்கள் கிஞ்சிற்றுமில்லாத சுபலக்கினத்தில் நடத்தும்படி சகல சாஸ்திரங்களும் முறையிடுகின்றன.

(10) மேலும் கும்பாபிஷேகாதி விஷயங்களுக்கு அனுபவத்தில் கும்பாபிஷேகம் செய்வதற்கு தோஷமில்லாத நல்ல முகூர்த்தங்கள் கிடைக்காததை முன்னிட்டு 3, 4 வருஷங்கள் வரை நல்ல காலத்தை எதிர்பார்த்துக் கார்த்திருப்பதையும் நாம் கண்கூடாகப் பார்க்கிறோமல்லவா.

(11) ஆனால் மேல்கண்ட சுபமுகூர்த்தங்கள் பார்க்கவேண்டியதான அநேக சுபாசுபக்கிரமங்களிருப்பதாலும் இங்கு கேழ்க்கப்பட்டதான மூன்று விஷயங்களுக்குமட்டும் தெரிந்தவரையில் விடையளித்திருக்கிறது. அதில் ஏதேனும் பிழையிருப்பினும் அதை முற்றுங்கற்ற பெரியோர்கள் எடுத்துரைப்பின் சிரஸால் வகிக்க சித்தனாகயிருக்கிறேன்.

K. பாலசுப்பிரமணியஅய்யர்,
விசுவநாதபுரம், ராமசந்திரபுரம் போஸ்டு.

---

## ஐய்ய வினாவிற்கு விடை,

பிரபவ-௵ சித்திரை-௴ 9-உ வெளிவந்த ஆர்யதர்மம் பத்திரிகையில் நமது நண்பர் கொத்தமங்கலம் K. S. சுந்தர ஜோதிஷர் அவர்களால் வெளியிடபட்ட ஐய்ய வினாவை, பார்த்து ஆநந்த மடைந்தேன்.

काल एवेश्वरस्साक्षादीश्वरः काल एव हि ।
तस्मात्कालं न जानन्ति योगिनोऽपि महीतले ॥
काल एव मनुष्याणां क्रियाणां साधनं यतः ।
तस्मात्कालः प्रबोद्धव्यः दैवज्ञैः कालवित्तमैः ॥
दैवैरपि मनुष्यैश्च सन्त्याज्याश्शास्त्रचोदिताः ॥

கால ஏவேஶ்வரஸ்ஸாக்ஷாதீஶ்வர: கால ஏவ ஹி ।
தஸ்மாத்காலம் ந ஜானந்தி யோகினோऽபி மஹீதலே ॥
கால ஏவ மனுஷ்யாணாம் க்ரியாணாம் ஸாதனம் யத: ।
தஸ்மாத்கால: ப்ரபோத்தவ்ய: தைவஜ்ஞை: காலவித்தமை: ॥
தைவைரபி மனுஷ்யைஶ்ச ஸந்த்யாஜ்யாஶ்ஶாஸ்த்ரசோதிதா: ॥

இந்த ஜோதிஷ சாஸ்திரத்துக்குக் கால சாஸ்திரமென்று பெயர் இந்தக் கால சாஸ்த்திரத்தால் ஜெனங்களுக்குக் கெடுதலை நீக்கி நல்ல பலனை அனுபவிக்கும்படி செய்ய சாஸ்ததிரம் ஏற்பட்டிருக்கிறது. காலமே ஈசுவரன் ஈசுவரனே காலமென்று ஏற்பட்டிருப்பதால் யோகிகளும் அறிவது அருமை. ஆகையால்தெய்வக்ஞர்கள் அப்பேர்ப்பட்ட நல்லகாலத்தை சாஸ்திரத்தால் நன்கு ஆராய்ந்து அறியவேண்டியது.

तिथेस्तु श्रियमाप्नोति वारादायुष्यवर्धनम् ।
नक्षत्राद्धरते पापं योगाद्रोगनिवारणम् ।
करणात् कार्यसिद्धिस्स्यात् ॥

திதேஸ்து ஶ்ரியமாப்னோதி வாராதாயுஷ்யவர்தனம் ।
நக்ஷத்ராத்தரதே பாபம் யோகாத்ரோகநிவாரணம் ।
கரணாத்கார்யஸித்திஸ்ஸ்யாத் ॥

என்ற வசனத்தாலும் சாஸ்திர விஹிதமான திதிவார நக்ஷத்திர லக்கினயோக கரணாதிகளுடன் கூடிய நல்ல காலத்தை ஒரு சுப காரியத்தின் உபக்கிரமத்துக்கு ஏற்படுத்த வேண்டியது.

ஆனால் நல்ல முகூர்த்த காலமானது தோஷமே இல்லாமலிருப்பது அருமையிலும் அருமை. மஹாதோஷங்களை வினா, ஸாமான்ய தோஷங்கள் குறைவாயும் குணம் அதிகமாயுமிருக்கும் முகூர்த்தங்களைப் பார்த்து சுபகாரியங்களை நடத்த வேண்டியதுதான் சாஸ்திரங்களின் ஸம்மதம்.

तल्लग्नं च शुभैस्त्रिभिर्युतमपि स्वोच्चस्थितैः स्वालय-
स्वांशस्थैर्यदि मित्रगैर्गुणशतैर्लग्नं च पञ्चेष्टिकम् ।
क्रूरेषु त्रिभवारिगेषु यदि वा वर्गोत्तमांशान्वितं
लग्नं दोषविदूषितं यदि तदा मृत्युपदं स्यात्तयोः ॥

தல்லக்3நம் ச ஶுபை4ஸ்த்ரிபி4ர்யுதமபி ஸ்வோச்சஸ்தி2தை: ஸ்வாலயஸ்வாம்ஶஸ்தை2ர்யதி3 மித்ரகை3ர்கு3ணஶதைர்லக்3நம் ச பஞ்சேஷ்டிகம் । க்ரூரேஷு த்ரிப4வாரிகே3ஷு யதி3 வா வர்கோ3த்தமாம்ஶாந்விதம் லக்3நம் தோ3ஷவிதூ3ஷிதம் யதி3 ததா3 ம்ருத்யுப்ரத3ம் ஸ்யாத்தயோ: ॥

இந்த வசனத்தால் ஏகவிம்சதி மகாதோஷங்களில் ஒன்றிருந்து குணம் எவ்வளவு ஜாஸ்தியிருந்தாலும் அப்படிப்பட்ட முகூர்த்தங்களை அவசியம் விலக்கவேண்டியது.

நமது நண்பர் கொத்தமங்கலம் K. S. சுந்தர ஜோதிஷர் அவர்களால் கேழ்க்கப்பட்ட ஐய்ய வினாவில் கண்ட நக்ஷத்திர கண்டாந்த தோஷம். ஏகவிமசதி மகாதோஷத்தில் சேர்ந்தது. மற்றதான லக்கின சுத்தமும், பஞ்சகமும், சுபகாரியங்களுக்கு அவசியம் பார்க்கவேண்டியது முக்கியம், ஷை லக்சினமும, பஞ்சகமும், சுத்தமில்லாமலிருப்பின் ஏகவிம்சதி மகாதோஷத்திற்குக் கொஞ்சம் குறைவாயும் இதரஸாமான்ய தோஷங்களுக்கு ஜாஸ்தியுமான தோஷம். லககின சுத்தம், பஞ்சகம், நக்ஷத்திர கண்டாந்தம் இவைகள் தோஷமுடையதாகஏற்படும் முகூர்த்தங்களைக் கும்பாபிஷேகாதி சுபமுகூர்த்தங்களில் முற்றிலும் விலக்கவேண்டியதென்று முகூர்த்த சாஸ்ததிரத்தின் அபிப்பிராயம்.

ज्योतिषं व्यवहारं च प्रायश्चित्तं चिकित्सकम् ।
विना शास्त्रेण यो ब्रूयात् तमाहुर्ब्रह्मघातकम् ॥

ஜ்யோதிஷம் வ்யவஹாரம் ச ப்ராயஶ்சித்தம் சிகித்ஸகம் ।
விநா ஶாஸ்த்ரேண யோ ப்3ரூயாத் தமாஹுர்ப்3ரஹ்மகா4தகம் ॥

என்ற வசனத்தால் சாஸ்திரத்தால் விலக்கியிருப்பதை வினு சாமான்ய தோஷத்தில் சில இருப்பினும் அதிககுணமுள்ள சுப முகூர்த்தங்கள் அங்கீகரிக்கதககவை.

எம். வி. சுந்தர சாஸ்திரி.
கானப்பேட்டை
ராமச்சந்திரபுரம் போஸ்டு.